பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 30 | செவ்வாய்க்கிழமை | 13.05.2025 | அதிர்வு 282

## 40 சபைகளில் எம்மால் ஆட்சியமைக்க முடியும்

### சு.க. அதிரடி அறிவிப்பு



“உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்கு ஏனைய கட்சிகளுக்கு ஒத்துழைப்பு

07



# கொழும்பு மாநகர சபையில் எந்த அணி ஆட்சியமைப்பது?

## பிரதான அரசியல் கட்சிகள் தீர்க்கமான பேச்சு

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பது தொடர்பில் பிரதான அரசியல் கட்சிகளில் தீர்க்கமான பேச்சு வார்த்தைகள் சில இந்த வாரம் இடம்பெறவுள்ளன.

ஆளுங்கட்சியைப் போன்றே எதிர்க்கட்சிகள் பலவும் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

06

## ரணில் போல் அநுரவுக்கு தற்றுணிவு கிடையாது!

### முன்னாள் அமைச்சர் விமல் விளாசல்

“இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அநுர அரசு பகிரங்கப்படுத்தும் என்ற நம்பிக்கை

07






முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போது அதிகாரம் ஏதும் இல்லாதவர். ஜனாதிபதிப் பதவியை இழந்த பின்னரும் நாடாளுமன்ற உறுப்பினராகவும், நிதியமைச்சராகவும், பிரதமராகவும் பதவி வகித்தவர். இப்போது அரசியலில் பெரும்பாலும் ஓய்வு நிலையில் தான் அவர் இருக்கிறார். ஆயினும் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேல் ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் அவரோடு ஊடாட்டத்தை – தொடர்பாடலை – நட்பு நிலையை – இன்று வரை நான் பேணி வருகிறேன்.

அவர் அதிகாரத்தில் இருந்த சமயத்தில் அவரது அலரி மாளிகை இல்லத்திலேயே பல சந்திப்புக்களின் போது அவருடன் முரண்பட்டு, வாதித்து, விவாதித்து, மோதியிருக்கிறேன். பல பேருக்கு முன்னால் – குறிப்பாக பிற பத்திரிகையாளர்களுக்கு முன்னால் – அவர் முகம் சிவக்க, கடும் கோபத்தில், என்னைத் திட்டிப் பேசிச் சத்தமிட்ட சம்பவங்களும் உண்டு. என் பத்திரிகையின் நிலைப்பாடும், என் எழுத்தும்,

06

# வெசாக் அலங்காரத்தில் ஈடுபட்ட சிறுமி மின்சாரம் தாக்கிச் சாவு!

வெசாக் பண்டிகையை முன்னிட்டு தனது குடும்பத்தினருடன் இணைந்து வீட்டை அலங்கரித்துக் கொண்டிருந்த சிறுமி ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் களுத்துறை, மொரகஹஹேன பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

9 வயதுடைய சிறுமியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

உயிரிழந்த சிறுமி வெசாக் பண்டிகையை முன்னிட்டு தனது குடும்பத்தினருடன் இணைந்து வீட்டைப் பல வர்ண மின்குமிழ்களால் அலங்கரித்துக் கொண்டிருந்துள்ளார்.



பின்னர் இந்தச் சிறுமி பல வர்ண மின்குமிழ்களுக்கு மின்சாரத்தை வழங்க முயற்சித்தபோது மின்சாரம் தாக்கிக் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சிறுமி பாதுக்கை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மொரகஹஹேன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும் என்கிறார் அமைச்சர் விஜித ஹேரத்



"கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும். ஐக்கிய மக்கள் சக்தி குறைவான ஆசனங்களை பெற்றுள்ளதோடு மாத்திரமின்றி, அக்கட்சியின் மேயர் வேட்பாளர் தொகுதியிலும் தோல்வி அடைந்துள்ளார். எனவே, அவர்களால் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்க முடியாது."

– இவ்வாறு வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவது யார் என்பதையே பெரும்பாலானவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியிலிருந்தே அதிகளவான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். 48 உறுப்பினர்கள் எமது கட்சியைச் சேர்ந்தவர்கள்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து 29 உறுப்பினர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களது மாநகர மேயர் வேட்பாளர் தொகுதியில் தோல்வியடைந்துள்ளார். தேசிய மக்கள் சக்தியின் இளம் வேட்பாளருடன் போட்டியிட்டு அவர் தோல்வி அடைந்திருக்கின்றார்.

தொகுதியில் மேயர் வேட்பாளர் தோல்வியடைந்துள்ள நிலையிலும், மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவதாகக் கூறுவதற்கு வெட்கமில்லையா? அவர்கள் முயற்சித்தாலும் அதற்கான வாய்ப்பு இல்லை. கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும்.

மாநகர சபை, நகரசபை அல்லது பிரதேச சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்திக்கும் யாருக்கும் எந்த சிறப்புரிமைகளையோ பணத்தையோ வழங்கி எவரையும் விலைக்கு வாங்கப் போவதில்லை என்பதை பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன். உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் மோசமான பழைய முறைமை எமது அரசாங்கம் ஒருபோதும் பின்பற்றாது.

நாம் பெற்றுக்கொண்டுள்ள வெற்றியை பலப்படுத்துவதற்கு ஏனைய உறுப்பினர்கள் விரும்பினால் அவர்களுடன் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொண்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்கு தயாராக இருக்கிறோம்."– என்றார்.

# யாழில் ஊசி மூலம் ஹெரோயினை நுகர்ந்த இளம் குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணத்தில்ஊசிமூலம்ஹெரோயினை உடலினுள் செலுத்திய இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி – மட்டுவில் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் ரொபின்சன் (வயது 27) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபரை நேற்றுமுனகினம் ஞாயிற்றுக்கிழமை காணாது உறவினர்கள் தேடியுள்ளனர். பின்னர் தாயாரின் வீட்டுக்குப் பின்னால் அவர் சடலமாகக் காணப்பட்டார்.

அவரது சடலத்தை மீட்டு நேற்று உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தியவேளை ஊசி மூலம் ஹெரோயின் பாவித்ததன் காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்று தெரியவந்துள்ளது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# பலாலி இராணுவ முகாமில் பணிபுரிந்த இராணுவச் சிப்பாய் மாரடைப்பால் சாவு!



பலாலி இராணுவ முகாமில் பணி புரிந்து வந்த இராணுவ சிவில் விவசாய உத்தியோகத்தர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

கண்டி - முறுத்தலை பகுதியைச் சேர்ந்த விதுர சஞ்சீவ மதுரட்ட (வயது 51) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி இராணுவ உத்தியோகத்தர் கடந்த 2009ஆம் ஆண்டு தொடக்கம் பலாலி இராணுவ முகாமில் பணிபுரிந்து வந்துள்ளார். அவருக்கு நேற்று திங்கட்கிழமை காலை திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டது. இதையடுத்து இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்று உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# குஷ் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பெண் கைது



தாய்லாந்தின் பாங்காக்கில் இருந்து இலங்கைக்கு வந்த பிரிட்டிஷ் பெண் ஒருவரால் சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட குஷ் என்ற போதைப் பொருளின் ஒரு தொகுதியை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இலங்கை சுங்கத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடத்திய சிறப்பு சோதனையின் போது, நேற்று திங்கள் கிழமை மதியம் நாட்டிற்கு வந்த பிறகு சுங்க வளாகத்தின் வழியாக செல்ல முயன்றபோது தடுத்து நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டபோது, அவரது பொருள்களுக்குள் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருள்களின் மொத்த எடை 46 கிலோகிராம் என்றும், அதன் மதிப்பு 460 மில்லியன் ரூபாய்க்கு அருகில் இருக்கும் என்றும் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரையும் போதைப்பொருள் பொதியையும் மேலதிக விசாரணைக்காக போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.







# வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று வெசாக் தின தானசாலை

**(கி.வசந்தன்)**

வெசாக் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று தானசாலை இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக வீதியோரத்தில் புத்தரின் உருவத்துடன் கூடிய காட்சிக் கூடம் ஒன்று பார்வைக்காகதிறந்துவைகப்பட்டதுடன்,கொட்டகை அமைத்து தானசாலையும் இடம்பெற்றது.

மரவள்ளி கிழங்கு சம்பலுடன் தானம் வழங்கப்பட்டது. வீதியால் சென்ற பலரும் நீண்ட வரிசையில் நின்று அதனைப் பெற்றனர்.

இந்நிகழ்வில் பௌத்த மதகுரு, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) நா.கமலதாசன், உதவி மாவட்ட செயலாளர் சபர்ஜா, மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன், வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸ் நிலையம் முன்பாகவும் பொலிசாரால் தானசாலை இடம்பெற்றது. அவர்களும் மரவள்ளி கிழங்கு மற்றும் சம்பல் வழங்கினர்.

மேலும், வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் மதியச் சாப்பாடு தானமாக வழங்கப்பட்டதுடன், பல இடங்களில் ஐஸ்கிறீமும் விநியோகிக்கப்பட்டது. இதில் பெருமளவான மககள் வேறுபாடின்றிக் கலந்து கொண்டு அதனைப் பெற்றுச் சென்றனர்..





# யாத்திரை சென்ற பஸ் விபத்து! 20 பேர் வைத்தியசாலையில்!!

யாத்திரை சென்ற தனியார் பஸ் வீதியில் இருந்து விலகி விபத்துக்குள்ளானதில் 20 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி, அலதெனிய – யடிஹலகல பகுதியில் நேற்று திங்கட்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் பாரிகம, கண்டி மற்றும் பேராதனை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






# தமிழ் பக்திப் பாடல், பௌத்த வரலாற்று கதைகளுடன் நேற்று புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற வெசாக்தினக் கொண்டாட்டம்

(பா.சதீசன்)

கௌதம புத்தரின் பிறப்பு, ஞானம் பெறல் மற்றும் பரிநிர்வானத்தை நினைவு கூரும் உலக பௌத்தர்களின் புனிதமான நாளான வெசாக் தினம் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள பௌத்தர்கள் விளக்குகளை ஒளிர விட்டு, வழிபாடுகளுக்கு முன்னுரிமை அளித்து, மிகுந்த பக்தியுடன் இதனைக வருடம் தோறும் மே மாதம் கொண்டாடி வருகின்றனர். அந்தவகையில் வெசாக் தினம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு 59ஆவது காலல் படையினரின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை மைதானத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் புத்த பெருமானின் பரிநிர்வாண்ச்த்தை நினைவுகூரும் வரலாற்று கதைகள் வெளிச்ச வீடுகளில் தமிழ் மொழியில் ஒலி மூலம் வெளிப்படுத்தப்பட்டமையோடு, சில வெளிச்ச வீடுகளில் ஞானம் பெறும் நிலை குறித்த தமிழ் பக்தி பாடல்கள் ஒலிபரப்பப்பட்டிருந்தன. நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் அனைவருக்கும் சிறந்த முறையில் இரவு உணவும் வழங்கப்பட்டது.

வெசாக் கொண்டாட்டத்தில் சாதி, மதம், இனம் என்ற வேறுபாடு கடந்து சிறுவர்கள், பெரியோர்கள் எனப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.


வெசாக்தினத்தினை முன்னிட்டு நேற்றும் இன்றும் உணவு வழங்கும் நிகழ்வு இடம்பெற இருப்பதும் குறிப்பிடத்தக்கது.















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தச் சமயங்களில் அவரைச் சீண்டி அவ்வாறு சினக்கப் பண்ணி இருக்கும் என்பது நிச்சயம். அதுவும் பாதுகாப்பு விவகாரங்களில் அவரது வலதுகரமாக அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ இருந்த காலத்தில் இயல்பாகவே என் மீது அவருக்கு சீற்றமும் இருப்பது புரிந்து கொள்ள தக்கதுதான்.

அப்படியான ஒரு வாத விவாதத்தின் போது – அவர் மிகக் கோபமாக என் மீது பாய்ந்து விழாத குறையாக சத்தமிட்ட போது – நான் அவருக்கு சொன்ன ஒரு விடயத்தை, இப்போது இந்த நாட்டின் அரசுத் தலைவருக்கு ஒரு தடவை யாராவது குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமானது என்று நினைக்கிறேன்.

அந்தச் சம்பவம், என் ஞாபகம் சரி என்றால் 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் நடுப் பகுதியில் ஒரு நாள் காலையில் அலரி மாளிகையில் நடந்தது. விடுதலைப் புலிகளுக்கும் மஹிந்த அரசுக்கும் இடையில் ஜெனிவா – 1 சமாதானப் பேச்சுக்கும், ஜெனிவா – 2 பேச்சுக்கும் இடையில் ஒரு பெரும் தாக்குதலை விடுதலைப் புலிகள் வன்னியில் பல முனைகளில் அதிரடியாக ஆரம்பித்தமையை அடுத்து 'ஏ-9' பாதை அரசினால் போக்குவரத்துக்கு மூடப்பட்டது.

அந்தச் சமயத்தில் பத்திரிகை ஆசிரியர்களை காலை உணவோடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்தார். அதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தான் செஞ்சோலை விமானக் குண்டு வீச்சுப் படுபாதகம் அரங்கேறியிருந்தது. என் மனதை ரொம்பவும் அந்த விடயம் அரித்துக் கொண்டிருந்தது.

பொதுவாக பத்திரிகையாளர்களுடனான கலந்துரையாடல் முடிந்த பின்னர் அவரது இல்லத்தில் தட்டுகளில் பரிமாறப்பட்ட உணவை கைகளில் வைத்துக்கொண்டு நாங்கள் நின்றபடி உரையாடிய போது இந்தச் சம்பவம் நடந்தது.

வேறு ஏதோ ஒரு விடயத்தை ஒட்டி என் மீது சீறிக் கொண்டிருந்தார் ஜனாதிபதி மஹிந்தர்.

**"You are praising the law of the jungle."** என்று தொடங்கி புலிகளை ஆதரிக்கும் காட்டுமிரண்டித்தனத்தை நீங்கள் செய்கின்றீர்கள் என்ற மாதிரி என்னைப் பார்த்து தயவு தாட்சணயமின்றி அவர் சீறி விழுந்து கொண்டிருந்தார். அவரது கோபத்தையும், கடும் சொற்களையும் பார்த்தும் கேட்டும் அதிர்ந்து போயிருந்தனர் மற்றப் பத்திரிகையாளர்கள். அவர்கள் இதனை எதிர்பார்க்கவில்லைப் போலும். காலை விருந்துக்கு அழைத்து இப்படி ஒரு பத்திரிகையாளரை அவர் வசை பாடுவார் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்க மாடார்கள்தான்.

ஆனால் அந்த சந்திப்புக்குப் போகும் போது இப்படியாகும் என்று நான் எதிர்பார்த்திருந்தேன். அதற்கு முன்னர் புலிகளுக்கும் ஜனாதிபதி மஹிந்தருக்கும் இடையில் சமரச முயற்சிகளில், வெளியே தெரியாத தூதுவனாக நான் பங்குபற்றிருந்தமையால, புலிகள் இப்போது அரசு படைகள் மீது திடீரெனத் தாக்குதல் தொடங்க அது தொடர்பிலான ஜனாதிபதியின் சீற்றம் என் மீது தான் முதலில் திரும்பும் என்பதை நான் எதிர்பார்த்திருந்தேன். அவரது சீற்றத்திற்கு நான் அடங்கிவிடவில்லை. நானும் பதிலுக்கு வாயாடினேன். என் பக்கத்தில் உணவுத் தட்டுடன் நின்ற இன்னொரு தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியர் மற்றவர்களுக்கு தெரியாமல் என் சேர்ட்டைப் பிடித்து அடிக்கடி இழுத்துக் கொண்டிருந்தார். திருப்பி கதைத்து, வாயடிக்க வேண்டாம் என்பது அவரது சுரண்டலின் செய்தி. நான் அதைப் பொருட்படுத்தாமல் என்னளவில் – முடிந்தளவில் – ஜனாதிபதியின் சீற்றத்திற்கு பதிலை சற்றுக் காட்டமாகக் கொடுத்துக் கொண்டிருந்தேன்.

சில தினங்களுக்கு முன்னர் நடந்த செஞ்சோலை சிறார்கள் மீதான குண்டு வீச்சு என் மனதை அரித்துக் கொண்டிருந்தமையால், மற்ற பத்திரிகையாளர்களுக்கு முன்னால் நான் அந்த விடயத்தை நோக்கி வாதத்தைத் திருப்பினேன்.

அப்பாவிச் சிறார்களை படுபாதகமாகக் கொன்று விட்டீர்களே என்ற சாரப்பட நான் மென்மையான குரலில், ஆனால் காட்டமான குற்றச்சாட்டை அவரை நோக்கி வைத்தேன்.

அவர் சீற்றத்துடன் பாய்ந்து பதிலளித்தார்.

"இல்லை, இல்லை... அது புலிகளின் பயிற்சிப் பாசறை. புலிகள் இராணுவப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த இடம் மீதுதான் தாக்குதல் நடத்தப்பட்டது" என்று சாரப்பட அவர் உறுதியாகப் பதில் கூறினார்.

"இல்லை நான் அந்த வன்னிபுனம் பகுதிக்கு முன்னர் போய் இருக்கிறேன். குண்டு வீச்சு நடந்ததும் என் செய்தியாளர் அங்கு நேரில் சென்று இருக்கிறார். அது பாடசாலை பிள்ளைகளுக்கு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பயிற்சிகள் வழங்கப்படுகின்ற இடம். சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த பாடசாலை சிறார்கள் மீதுதான் உங்கள் விமானப்படை குண்டு வீசி இருக்கின்றது" என்று திடமாக, உறுதியாக, அணித்தரமாக, ஆனால் மென்மையாக நான் கூறினேன்.

அது, அவருக்கு இன்னும் சீற்றம் தந்திருக்கும் போல.

முகம் சிவக்க எண்ணிப் பார்த்தபடி "உங்கள் ஆள்கள்தான் (தமிழர்கள்தான்) அந்த தகவலை தந்தார்கள். அது தப்பில்லை" – என்றார் அவர்.

"அதுதான் கூறுகிறேன் யுவர் எக்ஸலன்ஸி, உங்களை சிலர் தவறாக வழி நடத்துகிறார்கள். அதற்கு எடுபட்டு நீங்களும் பிழையான வேலைகளைச் செய்கிறீர்கள்" **"That is why I am telling you, Your Excellency, that some people are misdirecting you."** என்றேன் நான்.

ஒரு கணம் அவர் பொறி கலங்கி, ஸ்தம்பித்து நின்றமையை நான் பார்த்தேன். ஆனால் அவர் தன்னை சுதாகரித்துக் கொண்டார். தொடர்ந்து என் மீது வசை பாடினார்.

"நான் சந்திரிகா அல்லன். பொறுத்திருந்து பாருங்கள் எப்படி உங்கள் எல்லோருடைய வாலையும் ஒட்ட நறுக்குகிறேன்" என்ற மாதிரி அவருடைய சீற்றப் பேச்சு அமைந்தது.

இந்த வாதாட்டம் பற்றிய விவகாரம், என்னை மிரட்டும் பாணியில் அவர் அந்த உரையாடலில் பேசிய விடயங்கள் பின் ஆசிய மனித உரிமைகள் அமைப்பின் இலங்கை பற்றிய அறிக்கையில் வார்த்தைக்கு வார்த்தை வெளியாகி இருந்தன. தமிழ்ப் பத்திரிகை ஆசிரியரை காலை உணவுக்கு அழைத்து மிரட்டிய நாட்டின் ஜனாதிபதி என்று சாரப்பட அதன் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அதுவல்ல விடயம். நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு 19 ஆண்டுகளுக்கு முன்னர் சொன்ன அந்தக் கருத்தை இப்போது இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு நேரில் சொல்ல யாரேனும் இருக்கின்றார்களா என்று எண்ணிப் பார்க்கிறேன்.

"ஜனாதிபதி அவர்களே! உங்களை சிலர் தமிழர் தாயகத்தில் இருந்து பிழையாக வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் மனதை வெல்ல உங்களுக்கு கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை இடையில் வந்த சில முட்டாள் பிரகிருதிகள் உங்களைத் தவறாக வழி நடத்தி, இந்த வாய்ப்பை போட்டடித்துக் குழப்புகிறார்கள். தங்களின் அறிவிலித்தனத்தால் – பிழையான அணுகுமுறையால் – தமிழர்களின் ஆதரவை ஜனாதிபதி அடியோடு இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை, மூடி மறைத்து, வேறு கதைகளை உங்களுக்குப் புனைந்து கொண்டிருக்கின்றார்கள். வன்னியில் தமிழரசுக் கட்சியின் வெற்றிக்கு கசிப்பு விநியோகமும், பணம் பட்டுவாடாவும் காரணம் என்ற விடயம் கூட இவ்வாறு பிழையாக வழிநடத்துவோரின் அபத்தக் குற்றச்சாட்டுகள்தான். இவ்வாறு தவறாக உங்களை – உங்கள் அரசை – வழிநடத்தும் பிரகிருதிகளை நீங்கள் தொடர்ந்தும் பொறுப்புக்களிலும் பதவிகளிலும் விட்டு வைத்திருந்தால், அவர்களின் வழிநடத்தலில் நீங்கள் தமிழரின் ஆதரவை அடியோடு இழப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும்." – இப்படி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு யார் சொல்லப் போகின்றார்? தெரியவில்லை.!

அப்படியான உண்மைகளை நேரில் தமக்குத் தெரிவிக்க கூடிய நடுநிலையாளர்களை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பக்கத்தில் வைத்திருப்பார் என்று கூடத் தெரியவில்லை....!

---

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த வாரம் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியில் இருந்து 48 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். எனினும், ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகளில் இருந்து 69 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறான நிலைமையில் தனிக் கட்சியாகத் தேசிய மக்கள் சக்தியில் இருந்து அதிக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளவில்லை.

இதன் காரணமாகவே கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவது யார் என்ற சர்ச்சைக்குரிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமக்கு அதிகளவான ஆசனங்கள் கிடைத்துள்ளதால் தாமே கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவதாக ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி தெரிவித்து வருகின்றது. எவ்வாறிருப்பினும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் எதிர்க்கட்சிகள், கூட்டணியமைத்துப் பெரும்பான்மையை உறுதிப்படுத்தி கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் இது குறித்த பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டுள்ளார். அந்தவகையிலேயே இந்த வாரமும் தீர்க்கமான பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.




# மண்வெட்டி கணையால் தாக்கப்பட்ட குடும்பஸ்தர் உயிரிழந்த நிலயில் மீட்பு

## லிந்துலை பொலிஸ் பிரிவில் சம்பவம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலைகூம்வூட்தோட்டத்தில்ஆண் ஒருவர் சடலமாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான முத்துசாமி எட்வெட் (வயது 53) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீதியில் படிக்கட்டுக்களில் கிடந்த சடலத்தைக் கண்ட பிரதேசவாசிகள் லிந்துலை பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த லிந்துலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சனிக்கிழமை இரவு குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகக் இந்த நபர் அவரது உறவினர்களால் வீட்டிலிருந்த மண்வெட்டிக் கணையால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என தெரிய வந்துள்ளது. பின்னர் உறவினர்களால் சடலம் வேறொரு இடத்தில் வீதியோரமாக இருந்த படிக்கட்டுக்களில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. சந்தேகத்தின் பேரில் உயிரிழந்த நபரின் சகோதரர் ஒருவர் லிந்துலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை லிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## 40 சபைகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வழங்குவதற்கு அப்பால், ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் நாம் ஆட்சியமைப்பது குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம். அந்தவகையில் 40 உள்ளூராட்சி சபைகளில் எம்மால் ஆட்சியமைக்க முடியும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், “உள்ளூராட்சி சபைகளில் பெற்றுக் கொண்ட வாக்குகளின் அடிப்படையில் சபைகளை நிறுவுதல், கூட்டணியமைத்தல் குறித்து அரசியல் குழு கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கமையவே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். வேட்புமனுத் தாக்கலின் போது இடம்பெற்ற தவறுகளை நிவர்த்தி செய்து கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

ஏனைய கட்சிகள் சபைகளை அமைப்பதற்கு எமது ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாகும். அத்தோடு சில உள்ளூராட்சி சபைகளில் ஏனையோரின் ஒத்துழைப்புடன் எமக்கு ஆட்சியமைக்கக் கூடிய நிலைமை கூட காணப்படுகின்றது.

இது தொடர்பிலும் நாம் அவதானம் செலுத்தியிருக்கின்றோம். சில தரப்பினருடன் பேச்சுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக மக்களுக்கு வழங்கப்படக் கூடிய சேவைகள் தொடர்பிலேயே விசேட அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

சுமார் 100 உள்ளூராட்சி சபைகளில் எமது ஆதரவின்றி எவராலும் சபைகளை நிறுவ முடியாது. எவ்வாறிருப்பினும் நாம் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை.

உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் ஆளுந்தரப்பினர் சிலர். பொறுப்பற்ற கருத்துக்களை வெளியிடுகின்றனர். தமக்கு வாக்களிக்காவிட்டால் நிதி ஒதுக்கப்பட மாட்டாது எனப் பிரசாரக் கூட்டங்களின்போது ஜனாதிபதி அச்சுறுத்தி இருந்தார்.

அவரைப் பின்பற்றியே ஏனையோரும் இது போன்ற கருத்துக்களை வெளியிடுகின்றனர். எவ்வாறிருப்பினும் அரசின் அச்சுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப் போவதில்லை. ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்புடன் எம்மால் 40 சபைகளில் ஆட்சியமைக்க முடியும்.” – என்றார்.

## ரணில் போல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கிடையாது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா தொடர்பான ஒருசில விடயங்களில் தற்றுணிவுடன் செயற்பட்டார். அந்தத் தற்றுணிபு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கிடையாது.”

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை மத வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தேசிய மக்கள் சக்தி பொய் மற்றும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்தது. நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் தவறான அரசியல் தீர்மானம் எடுத்ததை மக்கள் தற்போது விளங்கிக்கொண்டுள்ளார்கள். அதனையே நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பெரும்பான்மைப் பலம் உள்ளது என்ற ஆணவத்தில் அநுர அரசு தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றது. 2020ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டபய ராஜபக்ஷ அரசுக்கும் பெரும்பான்மைப் பலம் இருந்ததையும், அந்தப் பலம் இரண்டாண்டுக்குள் பலவீனமடைந்ததையும் அநுர அரசு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தியாவுடன் அரசு அண்மையில் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களின் விவரங்கள் இதுவரையில் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. இந்த விடயத்தில் அரசு வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை.

பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதாயின் அதற்கு இந்தியாவின் அனுமதியைப் பெற வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

கடந்த காலங்களில் இதனைக் காட்டிலும் இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பல ஒப்பந்தங்கள் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்த அரசு பகிரங்கப்படுத்தும் என்ற நம்பிக்கை கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா தொடர்பான ஒருசில விடயங்களில் தற்றுணிவுடன் செயற்பட்டார். அந்தத் தற்றுணிபு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கிடையாது.

சர்வதேச நாணய நிதியத்தின் விவகாரத்தில் அநுர அரசு நாணய நிதியத்தின் சகல நிபந்தனைகளுக்கும் அடிபணிந்துள்ளது. மின் கட்டண அதிகரிப்பு ஊடாக இதனை எதிர்வரும் மாதமளவில் விளங்கிக்கொள்ள முடியும்.” – என்றார்.





## அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலயத்தின்

# சித்திரா பௌர்ணமி உற்சவ சமயத்தில் ஆலய சுற்றாடலில் திடீர் பரிசோதனை

## மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுகள் அழிப்பு

(பா.சதீசன்)

அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரா பௌர்ணமி உற்சவத்தை முன்னிட்டு ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட உணவு கடைகள், சிற்றுண்டி கடைகள் மீது திடீர் பரிசோதனை ஒன்று நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரை பௌர்ணமி உற்சவம் நேற்றையதினம் மிக சிறப்பான முறையில் இடம் பெற்றது.

ஆலய வளாகத்தில் இருந்த உணவுக் கடைகள், ஐஸ்கிறீம் வாகனங்கள் மற்றும் சுண்டல் வண்டில்கள் போன்றவை மீது பரிசோதனை நடவடிக்கை சுகாதரா பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சோதனை நடவடிக்கையில் ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட மாங்குளம் பொதுச்சுகாதார பரிசோதகர்களான நதிருசன் தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்களான லோஜிதன், டிலக்சன் ஆகியோர் ஈடுபட்டனர்

அதன்போது மனிதநுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப்பொருள்கள் அழிக்கப்பட்டன. சில உணவக உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பொது சுகாதார பரிசோதகர்களினால் உணவக நிறுவனங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிமுறைகளும் எடுத்து கூறப்பட்டன.


















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தமிழர் போக்கில் தெற்கு

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் ஒரு விடயத்தில் தமிழர் தாயகத்தை - வடக்கு, கிழக்கை - ஒத்ததாக தென்னிலங்கையையும் பயணிக்கச் செய்யும் கட்டாயத்துக்குள் தள்ளி இருப்பது இப்போது அவதானிக்கத் தக்கதாக இருக்கின்றது.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் நடப்பதற்கு முன்னரே, தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் எடுத்த முடிவை இப்போது தேர்தலின் பின்னர் தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி இருக்கின்றது.

தமிழர் தாயகத்தில் இந்த உள்ளூராட்சித் தேர்தலின் வாக்களிப்புக்கு முன்னரே தமிழ்க் கட்சிகள் ஒரு விடயத்தில் தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்டன. அது - தமிழர் பிரதேசத்தில் எந்த சபையிலும் ஆளும் தேசிய மக்கள் சக்தியை ஆட்சி அமைக்க விடக்கூடாது, அதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் தங்களுக்குள் ஒன்று பட்டு உறுதியாக நிற்க வேண்டும் என்பதுதான் அந்த முடிவு.

தேர்தலில் தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் முரண்பட்டாலும் - அரசியல் ரீதியாக மோதினாலும் கூட - தேர்தலுக்குப் பின்னர் ஆளும் தேசிய மக்கள் சக்தியை ஆட்சி அமைக்க விடாமல் தோற்கடிப்பதில் தங்களுக்குள் ஒன்று படுவது என்பதில் அவை நேரத்துடனேயே இணங்கிக் கொண்டு விட்டன. அந்த இணக்கத்தின் தொடர் நடவடிக்கைகள்தான் இப்போது தமிழர் தாயகத்தில் கட்டவிழ்கின்றது.

ஆனால், தென் இலங்கையில் இப்போதுதான் எதிர்க்கட்சிகள் மட்டத்தில் இவ்வாறு ஆளுந்தரப்பை ஆட்சி அமைக்க விடாமல் முறியடிக்கத் தங்களுக்குள் ஒன்றுபடும் திட்டம் பற்றிய யோசனைகள், ஆலோசனைகள், திட்டங்கள் கட்சிகள் மட்டத்தில் பரிசீலிக்கப்படுகின்றன என்று செய்திகள் வெளியாகி உள்ளன

எதிர்க்கட்சி பெரும்பான்மையாக உள்ள உள்ளூராட்சி மன்றங்களில், கட்சி சார்பற்ற சபைகளாக, நிர்வாகங்களை அமைக்க அனைத்து எதிர்க்கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தங்களுக்குள் ஒன்றுபட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர நேற்று அழைப்பு விடுத்திருக்கின்றார்.

சபைகளில் தலைவர் பதவிகள் அல்லது துணைத் தலைவர் பதவிகளைப் பற்றி சிந்திக்காமல், தேசிய மக்கள் சக்திக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் ஒன்றுபட வேண்டும் என்று அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இப்படிக் கட்சிசாரா சபை நிர்வாகங்கள்எதிர்க்கட்சிகளின்ஒன்றுபடுகை மற்றும் இணக்கங்களினால் உருவாகுமானால், அப்படித் தெரிவாகும் அனைத்து சபைகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் தங்கள் பதவிக் காலத்தில் எந்த மோசடி மற்றும் ஊழலிலும் ஈடுபட மாட்டோம் என்று உறுதிமொழி அளிக்க வேண்டும் என்றும் அவர் கோரியிருக்கின்றார்.

அவர் கோருவது போன்று தனித்து எந்தக் கட்சியும் சாராத பொதுவான சபை நிர்வாகங்களை பிரதேச சபைகள் தோறும் அமைக்கும் எண்ணம் - திட்டம் - யோசனை - தமிழர் தரப்பில் உருவாகாவிட்டாலும், ஆளும் தரப்புக்கு எதிரான ஐக்கியப்படல் மட்டும் இங்கு உறுதியாக உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.





# சஜித் பிரேமதாஸவின் வழிகாட்டலில் வெசாக் பௌர்ணமி வழிபாடுகள்

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வெசாக் பௌர்ணமி தின தர்ம பிரசங்கம் பன்னிபிட்டிய, மாலபல்ல, ஸ்ரீ சுதர்சனராம விகாரையில் நேற்று திங்கள் கிழமை நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் வழிகாட்டலின் நிமித்தம், ஒவ்வொரு பௌர்ணமி நாளிலும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் தர்ம போதனை நேற்றும் நடைபெற்றது.

மாத்தறை, ஹித்தெட்டிய ரஜமஹா விகாரை, மாத்தறை காளிதாச வீதி ஸ்ரீ ஆரிய ஜோதிடராமய, பிலியந்தல மடபாத சிறி கஸ்ஸப தர்மாயன, மாலபல்ல ஸ்ரீ சுதர்சனராமய ஆகிய மூன்று மகா விகாரைகளினதும் பிரதம விகாராதிபதியும் மாத்தறை - அம்பாந்தோட்டை இரு பிரிவுகளினதும் பிரதம சங்க நாயக்க தேரர் சங்கைக்குரிய கலாநிதி அலுஹேரே கஸ்ஸல நாயக்க தேரரின் பணிப்புரையின் பிரகாரம், பன்னிபிட்டிய, மாலபல்ல, ஸ்ரீ சுதர்சனராமய விகாரையில் கடமை புரியும் மேதகம மஹிந்த தேரர் நேற்றைய தர்ம போதனையை நிகழ்த்தினார்.













# தொல்லியல் திணைக்களம் பௌத்த பிக்குகளின் கூடாரமா? இனவாதத்தைத் தூண்டும் பிக்குகள் மீது நடவடிக்கை தேவை

## ரவிகரன் எம்.பி. காட்டத்துடன் கோரிக்கை

(பா.சதீசன்)

குருந்தூர்மலை அடிவாரத்தில் தமது பூர்வீக விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும்நோக்கில் கடந்த 10.05.2025 அன்று தமிழ் விவசாயிகள் மூவர் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டபோது, தொல்லியல் பகுதிக்குள் பண்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். பௌத்த பிக்குகள் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பொலிஸார் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இந் நிலையில் இந்த நிலங்கள் முழுவதும் தமிழ் மக்களினுடையவை எனக் குறிப்பிட்டுள்ள வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தொல்லியல் பகுதிக்குள் இந்த விவசாயிகளால் பண்படுத்தல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தால் கூட, அது தொடர்பில் தொல்லியல் திணைக்களமே முறைப்பாடு செய்திருக்கவேண்டும் எனவும், இது தொடர்பில் பௌத்த பிக்குகள் முறைப்பாடு செய்வார்களானால் தொல்லியல் திணைக்களம் பௌத்த பிக்குகளது கூடாரமா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்தோடு இனவாதத்தைத் தூண்டுகின்றவகையில் செயற்படுகின்ற இவ்வாறான பௌத்த பிக்குகளுக்கெதிராக தற்போதைய ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

குருந்தூர்மலைப் பகுதியில் தமிழ் விவசாயிகள் கைதுசெய்யப்பட்ட விவகாரத்தில் பௌத்த பிக்குகளின் அடாவடித்தனமான - இனவாதத்தைத் தூண்டுகின்ற - செயற்பாடுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

குருந்தூர்மலை அடிவாரத்தில் காணப்படும் விவசாய நிலங்களில் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் 10.05.2025 சனிக்கிழமையன்று மூன்று தமிழ் விவசாயிகள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மூவரும் 11.05.2025அன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளமையுடன், இருவர் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

குருந்தூர்மலை அடிவாரத்தில் காணப்படும் விவசாயக் காணிகள் பூர்வீகமாக தமிழ்மக்கள் விவசாயம் செய்துவந்த காணிகளாகும். இந் நிலையில் தொல்லியல் திணைக்களத்தினர் அடாத்தாக எல்லைகல் கற்களையிட்டு அபகரித்து வைத்துள்ளனர்.

இந்த விவசாய நிலங்களில் கடந்த வருடம்கூட விவசாயிகளால் பயிர்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந் நிலையில் இவ்வருடமும் அந்த வயற்காணிகளில் விவசாயம் செய்யும்நோக்கில் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்ட விவசாயிகளே இவ்வாறு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு நேரடியாகச் சென்று இவ்வாறு கைதுசெய்யப்பட்ட விவசாயிகளைப் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடியமையுடன், எமது விவசாயிகளது சுதந்திரமான தொழில்செய்யும் உரிமை மறுக்கப்படுவதுதொடர்பில் எனது வன்மையான கண்டனங்களையும் தெரிவித்திருந்தேன்.

பௌத்த பிக்குகளின் முறைப்பாட்டிற்கமையவே இவ்வாறு பொலிஸாரால் எமது விவசாயிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இங்கு தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக்காணிகளைப் பறித்ததோடு மாத்திரமின்றி, அக்காணிகளுக்குரிய தமிழ் மக்கள், வாழ்வாதாரத்திற்காக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிக்கின்றபோது பௌத்த பிக்குகளின் முறைப்பாட்டிற்கமைய பொலிஸாரால் கைதுசெய்யப்படுகின்ற அவலமும் அரங்கேறுகின்றது.

இந்தவிடயத்தில் உரியவர்கள் நியாயமாக நடந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறாக இனவாதத்தை வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளுக்கெதிராக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கையெடுக்கவேண்டும்.

அனைத்து இன மக்களையும் சேர்த்துக்கொண்டு பயணிப்போமென்று கூறிக்கொண்டு ஆட்சிசெய்துகொண்டிருக்கும் தற்போதைய ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் கவனமெடுக்க வேண்டும். இவ்வாறாக்இனவாதத்தைக் கக்கிக்கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

# இன்று வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்தில்

நாட்டின் பல பகுதிகளில் இன்று மனித உடலால் உணரக்கூடிய வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்திற்கு உயரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி, அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் மொனராகலை மாவட்டங்களின் சில இடங்களில் இன்று மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்திற்கு உயரக்கூடும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், பொதுமக்கள் போதியளவு நீர் அருந்துமாறும், இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



அத்துடன், வயோதிபர்கள், சிறுவர்கள் மற்றும் நோயாளர்கள் குறித்தும் மிகுந்த அவதானம் செலுத்துமாறு, வளிமண்டலவியல் திணைக்களம் கோரியுள்ளது.

# தேசிய மக்கள் சக்திக்கு எதிராக உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்க அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்

## தயாசிறி ஜயசேகர கோரிக்கை

அனைத்து அரசியல் கட்சிகளையும் திருடர்கள் என தெரிவித்த தேசிய மக்கள் சக்திக்கு எதிராக உள்ளூராட்சி மன்றங்களில் கட்சி சார்பற்ற ஆட்சியமைக்க அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருணாகல் பிரதேசத்தில் திங்கள் கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



“தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இடம்பெற்ற முதலாவது உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அரசாங்கம் தோலிவியடைந்துள்ளது. அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 6 மாதங்களில் மக்களினால் வெறுக்கப்பட்ட அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் திகழ்கிறது. பொதுத் தேர்தலில் அரசாங்கத்துக்கு 68 இலட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. ஆனால் இந்த தேர்தலில் 23 இலட்சத்துக்கும் அதிக வாக்குகள் குறைவடைந்துள்ளன. இது அரசாங்கத்துக்கு பாரிய வீழ்ச்சியாகும்.

தேர்தலில் 269 உள்ளூராட்சி மன்றங்களை வெற்றிகொண்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்து வந்தாலும் அவர்களுக்கு 116 மன்றங்களிலேயே ஆட்சியமைக்க முடியும். 140க்கும் அதிகமான உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அந்த சபைகளில் தேவையான பெரும்பான்மை இல்லை. தேர்தலில் சுயாதீன குழுக்கள் வாக்குகளைப் பெற்று, அவர்களின் ஆதரவு இல்லாமல் ஆட்சி அமைக்க முடியாத சக்தியாக அவர்கள் மாறி இருக்கும் நிலையில், அவர்களை பயன்படுத்தி அல்லது அவர்களின் ஆதரவை பெற்றுக் கொண்டு ஆட்சியமைக்க அரசாங்கம் எதிர்பார்த்து இருக்கிறது.

இதற்காக அரசாங்கம் சுயாதீன குழுக்களுக்கு பல்வேறு வரப்பிரசாதங்கள் மற்றும் சன்மானங்களை வழங்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்து இருக்கிறது. குருணாகல் பண்டுகஸ் நுவர உள்ளூராட்சி மன்றத்துக்கு அரசாங்கத்துக்கு 17 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆனால் எதிர்கட்சிகளுக்கு 21 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாங்களும் ஏனைய எதிர்க்கட்சிகளும் இணைந்து இந்த சபையில் ஆட்சியமைக்க எங்களுக்கு முடியுமாகி இருக்கிறது.

அதனால் தேசிய மக்கள் சக்திக்கு தனித்து ஆட்சியமைக்க முடியாத அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து, சபைகளின் தலைவர், உபதலைவர் பதவிகள் தொடர்பில் சிந்திக்காமல் கட்சி சார்பற்றவகையில் ஆட்சியமைக்க, தேசிய மக்கள் சக்திக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.” – என்றார்.




# கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது ஐடா ஸ்டெல்லா சொகுசு பயணிகள் கப்பல்

ஐடா ஸ்டெல்லா சொகுசு பயணிகள் கப்பல் நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

மலேசியாவிலிருந்து 2,022 சுற்றுலாப் பயணிகள் மற்றும் 628 பணியாளர்களுடன் மேற்படி கப்பல் வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த கப்பல் நேற்று முன்தினம் இரவு அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்த பின்னர், நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

மேலும் அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா மற்றும் பெல்ஜியம் உள்ளிட்ட 30 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அந்த கப்பலில் வந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றுலாப் பயணிகள் கொழும்பு, பின்னவல, கண்டி மற்றும் நீர்கொழும்பு ஆகிய சுற்றுலாத் தலங்களுக்குச் செல்ல உள்ளனர்.




இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.


இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

19



ஜனாதிபதி ஜே.ஆர்



ரவி ஜெயவர்த்தன



விஜய குமாரதுங்க

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

ஜனாதிபதி ஜே.ஆர். மிகவும் தந்திரசாலி. பழுத்த அனுபவங்கள் கொண்ட சாணக்கியவாதி என்பது தென்னாசிய அரசியல் பரப்புகளில் நன்றாக உணரப்பட்டது. ஏன் இந்திரா காந்தி கூட அவரை 'தந்திரங்கள் நிறைந்த கிழட்டு நரி' என சில சமயங்களில் குறிப்பிட்டமை உண்டு. ஜே.ஆர. தன்னை 'தர்மிஷ்டராக' பிரதிபலிப்பார்.. தன்னை கடவுளின் பிரதிநிதியாக மக்கள் 'தேவவான்ஸா' என அழைக்க வேண்டும் என்று விரும்பினார். தனது ஆட்சி இலங்கையின் மன்னர் ஆட்சி என்றும் பெருமைப்பட்டார்.

ஆனால் அவர் தனது ஒரே ஒரு பிள்ளையை - மகனை - தனது அரசியல் வாரிசாகப் பிரதிநிதித்துவப்படுத்த முயன்றவர் அல்லர். முயற்சிகள் செய்யவில்லை. மகனை பொதுக்கூட்டங்களுக்கு அழைப்பதில்லை. பொது இடங்களில் அவருடன் படங்கள் எடுப்பதில்லை. இருவரும் சேர்ந்து வெளியில் செல்வதே அபூர்வம். ஆக, தனது மகன் ரவியை தனது பாதுகாப்பு ஆலோசகராக நியமித்து இருந்தாலும், ராஜீவ் காந்தியின் வரவேற்புக்கும், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதும் ரவியை அழைத்து இருந்தும், அவர் போகவில்லை. பின்னர் கொடுக்கப்பட்ட விருந்து உபசாரத்திலும் கலந்து கொள்ளவில்லை. ஆக, ஜே.ஆரின் வீட்டிலேயே, அவரது சாப்பாட்டு மேசையிலேயே இந்திய ஒப்பந்தத்திற்கு ஆதரவற்ற முறையில் தந்தையும் மகனும் எதிரும் புதிருமாக இருந்தார்கள்.

ரவியின் வாழ்க்கையும் புரியாத, விசித்திரமான ஒன்றுதான். அவர் துப்பாக்கிகளினால் குறி வைப்பதில் (Marksman) திறமையானவர். ஆசியாவின் தலைசிறந்தவராகக் கருதப்பட்டார். எப்பொழுதும் தன்னுடன் உயர்ந்த ரகக் கைத்துப்பாக்கி ஒன்றை அவர் கொண்டு செல்வது வழமை. துணைக்கென்று யாரையும் அழைத்துச் செல்வதில்லை. தனது காரைத் தானே ஓட்டிச் செல்வதும், கொழும்பு மத்தியில் சதாம் வீதியில் இருந்த ஓர் உணவகத்தில் எப்பொழுதும் மதிய உணவுக்கு வருவதும், தன்னைச் சந்திக்க வரும் கிழக்குப் பகுதி பௌத்த துறவிகளை பௌத்த இளைஞர் சமாஜத்தின் (YMBA) தலைமையகத்தில் சந்திப்பதும், அடிக்கடி பதவியா, வெலி ஓயா - மணலாறு குடியிருப்பு வாசிகளுடனுமான தொடர்புகளும் அவரது வாடிக்கையான செயற்பாடுகள். தான் ஜே.ஆரின் வாரிசு, ஆகையினால் அவரின் பின்னால் தான் ஜனாதிபதி என்ற எந்தவித முக்கிய தோறணைகளையோ, பந்தாக்களையோ அவர் காட்டுவதில்லை. சாதாரணமாக, எந்தவித டாம்பீகமும் அற்ற மனிதராக உலவி, அதே போக்கில் தந்தைக்குப் பாதுகாப்பு ஆலோசகராகத் தனித்தே பணி புரிந்தார். தியானங்களில் இருந்த ஆர்வங்களினால் அடிக்கடி தனியான தியானங்களுக்காக உள்ளூரிலும் வெளி

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

நாடுகளிலும் சென்று தங்கி விடுவது அவரது வழக்கம்.

இப்படியான புதிர்கள் நிறைந்தவர் சாந்த பண்டாரவுக்கு காட்டிய ஆவணங்களும் படங்களும் விசித்திரமானவை. தியானங்களில் ஊறிய மனிதரிடம் இருந்து எதிர்பார்க்கக் கூடியவை அல்ல. அதில் அவர் கிழக்கு மாகாணத்தில் எல்லைப்புறத்தில் வாழ்ந்த சிங்கள குடியேற்றவாசிகளுக்கு குடியேற்ற உதவிகள் செய்ததும், ஆயுதப் பயிற்சி தந்ததும், அங்குள்ள பௌத்த துறவிகள் மூலம் மக்களை விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு எதிராகத் தயார்படுத்தியமை போன்றவற்றுக்கான ஆதாரங்கள் அவை. இதே மாதிரி வெலிஓயா - மணலாற்றில் சிங்கள மக்களைக் குடியேற்றி, பயிற்சி கொடுத்து, இந்திய ஆயுதப்படை - விடுதலை புலிகளுக்கு எதிராக தயார் நிலையில் இருக்க உதவி செய்தது போல, ஜே.வி.பியை வழி நடத்தி, தேவையான ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும், தந்து நேரடியாகத் தமிழீழக் கோரிக்கையாளர்களின் போரில் இந்தப் பகுதிகளில் இறங்குமாறு கேட்டார். 'அங்கு தான் போர், எங்களிடையே - சிங்கள மக்களிடையே - இவை வேண்டாம்' என்பது அவர் வாதம்.

தமிழரின் காணிகளின் எல்லைப் பகுதியில் சிங்கள மக்களை குடியேற்றி, அவர்களுக்கு ஆயுதங்கள், பயிற்சிகள் தந்த ரவி ஜெயவர்த்தன இதை மட்டுமல்ல, எஸ்.டி.எவ். (விசேட அதிரடிப்படை) என்ற பயங்கரத்துக்கு அறியப்பட்ட முக்கிய தேவைகளுக்கான படையணியை உருவாக்கிப் பராமரித்தார். அவர்கள் மூலம் எல்லைப் பாதுகாப்பு நடந்தது என்பதை சாந்த பண்டார அறியும் வாய்ப்பு இருக்கவில்லை. ஏனெனில் ரவி ஜெயவர்த்தன அவை பற்றிப் பேசுவதில்லை. ஜே.வி.பியை அப்படியான துணைப்படையாக உள்வாங்கி, அவர்களை சிங்கள மக்களிடையே இருக்கும் அவலங்களில் இருந்து திசை திருப்ப எண்ணினார். விசேட அதிரடிப்படையின் அனுபவங்களால் தமிழ் விடுதலை குழுக்கள் கூட திம்புப் பேச்சு வார்த்தையின்போது எல்லையில் உள்ள சிங்கள மக்களிடமிருந்து ஆயுதங்கள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும், விசேட அதிரடிப்படை கலைக்கப்பட வேண்டும் என்றும் நிர்ப்பந்தித்தனர். ஆனால் ஒப்பந்தத்தின் பின் விசேட அதிரடிப்படை கலைக்கப்படவில்லை. கொழும்பின் பாதுகாப்புக்காக அது பணியமர்த்தப்பட்டது என ஜே.ஆர். கூறினார்.

சாந்தபண்டார தான் கட்சியின் உயர்மட்டத்துடன் பேசுவதாகக் கூறி, தனது விடுதலையை உறுதிப்படுத்தி, ஹேர்மன் குணரத்னவின் பொறுப்பிலேயே விடப்பட்டு, விடுதலையான பின், அவருடன் சேர்ந்து இந்தப் பேச்சு வார்த்தைகள் பற்றி ஊடகங்களுக்குப் பேட்டி கொடுத்துவிட்டு, சில மாதங்களில் தலைமறைவானார்.

ரவி ஜெவர்த்தனாவின் செய்திகளைப் பலமுறை தெரிவித்தும், பதிலளிக்காமல் இருந்த சாந்தபண்டார சில மாதங்களின் பின், கட்சியின் கோரிக்கைகளாக அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் நீக்கப்பட்டு, அதன் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலிலோ, சிறையிலோ இருப்பவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும், நாடாளுமன்றம், மாகாண சபைகளைக் கலைத்து, ஜனாதிபதியும் பதவி நீங்கி, உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவர் நாட்டைப் பாரம் எடுத்து, அவரது மேற்பார்வையில் அமையும் இடைக்கால அரசாங்கம் தேர்தலை நடத்த வேண்டும் என்ற வகையில் அவரது அறிவிப்புகள் அமைந்தன.

ரவி ஜெவர்த்தனா நீண்ட பதில் ஒன்றைத் தந்தார். 'ஜே.வி.பி. கட்சியின் நிலைப்பாடு எனக்கு ஏமாற்றம்



விஜய குமாரதுங்க - எம்.ஜி.ஆருடன்

அளிக்கிறது, எங்களுடைய சந்திப்புக்கு பின்னரும் ஜே.வி.பி. எவ்வளவோ மக்களை எங்கள் இனத்தில் கொன்றுள்ளமை மனிதாபிமானமற்றது, நேரடியாக அரசாங்கத்துக்குப் படைப்புலத்தில் உதவி செய்து, எதிரிகளைத் தோற்கடிக்காமல், இப்படி வெளிப்புறத்தில் நின்று பேசுவதில் எது வித பயனும் இல்லை, செய்ய வேண்டிய காரியங்களை மற்றோரும் படையினரும் செய்ய நீங்கள் அவற்றில் குளிர்காய்ந்து அரசியல் மாற்றத்தையும் அதிகாரத்தையும் தேடுவதாகத்தான் தெரிகிறது, உங்களை விடுவித்தமையால் பாதுகாப்புக் கட்டமைப்புகளால் நான் பலத்த விமர்சனங்களுக்கு உள்ளாகி உள்ளேன், உங்களை விடுவித்தமையால் கட்சியுடன் சில பேச்சுவார்த்தைகள் முன்னேறி இருக்க வேண்டும், ஆனால் இவற்றால் மனம் உடைந்து இருக்கிறேன்' என்ற தொனிகளிலிருந்தது ரவி ஜெவர்த்தனாவின் நீண்ட பதில்.

இதைத் தொடர்ந்து சாந்த பண்டார உரிமை கோரப்படாமல் ஜனவரி 1990 இல் இனம் தெரியாதவர்களால் கொல்லப்பட, சோமவன்ஸ அமரசிங்கவின் மேற்பார்வையில், மருத்துவர் ஒருவரின் உதவியுடன் ரவி ஜெயவர்த்தனாவைக் கொலை செய்யும் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் அவரை எங்கே வைத்துத் தாக்குவது, அவரது சரியான அடையாளத்துக்கான படம் என்பவை தீர்மானிக்கப்பட முன்னரே, மருத்துவர் கைது செய்யப்பட, அந்தத் திட்டம் நடைமுறைக்கு வராமல் போனது.

கட்டுப்பாடற்ற கொலைகள் தென்பகுதியில் பல பாகங்களிலும் தொடர்ந்து மக்களை அதிருப்திக்குள்ளாக்கி வேதனைப்படுத்தின.

ஐக்கிய தேசிய கட்சி நிர்வாகிகள், ஆதரவாளர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகிகள், ஆதரவாளர்கள், தங்களது உத்தரவுகளை மதியாதவர்கள், தங்களது மாணவர் மற்றும் தொழிற்சங்கங்கள் தொடர்பான கட்டமைப்புகளின் கோரிக்கைகளை கடைப்பிடிக்காதவர்கள் என்று விவஸ்தை இல்லாமல் கொலைகளை செய்தவர்கள், இப்பொழுது இடதுசாரிக்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

கட்சிகளிலும் கை வைத்தனர்.

அது போதாது என்று பள்ளிக்கூடங்களையும் மூட வைத்து, சிறார்கள் கைகளில் பதாகைகள் தந்து, ஊர்வலம் நடத்தினர். ஒன்றுமே அறியாத - அரசியல் தெளிவு இல்லாத - சிறுவர்கள் குழம்பிப் போய் நின்றாலும், பயமுற்ற பெற்றோரால் நடை பயணங்களுக்கு அனுப்பப்பட்டனர். அவை, பெற்றோர் கூட தங்களது இளைய சமுதாயத்தை அனுப்புகிறார்கள் என்ற பிரசாரங்களாகப் பெரிதாக்கப்பட்டன. மக்கள் முணுமுணுத்த போது தாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள், தங்களுக்கு எதிரானவர்கள் என்ற அளவுகோல்களில் தீர்மானங்களை எடுக்க வில்லை, யார் இந்திய ஒப்பந்தத்திற்கு ஆதரவானவர் அல்லது எதிரானவர் என்ற மதிப்பீட்டிலேயே அவற்றை முன்னெடுக்கிறோம் என்று கூறியவர்கள், தங்கள் படுகுழியில் ஒரு படியாக, மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட நடிகரும் சந்திரிகாவின் கணவருமான விஜய குமாரதுங்கவைக் கொலை செய்த போது மக்களால் ஜே.வி.பியின் போக்கை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சில வாரங்க ளுக்கு பின் 'சண்டே ஒப்சேர்வரில்' விஜயகுமாரதுங்க 'இந்த ஒப்பந்தம் நிலையான சமாதானம் ஒன்றை தரக்கூடிய சாத்திய கூறுகளை உள்ளடக்கி உள்ளது' என்ற கருத்தில் கட்டுரை எழுதி இருந்தார். ஆனால் ஜே.வி.பி. அவரை அந்தக் காரணத்துக்காகக் கொல்ல வில்லை, வளர்ந்து வரும் அவரது செல்வாக்கு, எல்லா மக்களிடையேயும் அவர் பாலிருந்த கவர்ச்சி போன்றவை தங்களது வளர்ச்சிக்குப் பாதகமாக இருக்கும் என ஜே.வி.பி. கணித்ததால்தான் அதைச் செய்தது. அவருடைய கொலையால் ஜே.வி.பி. தங்களது பயங்கரவாதத்தின் உச்சக்கட்டத்தை வெளிப்படுத்தக் காரணம் தங்களுக்கு எதிராக வ(ள) ரக்கூடிய பெரும் புள்ளிகளை எல்லா மாவட்டங்களிலும் துப்புரவு செய்ய வேண்டும் என்ற உயர் பீடத்தின் உத்தரவுகளுக்கு அமைய கொழும்பு மாவட்டத்தின் தலைவர் அஸ்கிரிய குணசிங்கவின் மேற்பார்வையில் விஜய குமாரதுங்க கொல்லப்பட்டார். இவருடைய கொலையை அடுத்து விஜயவீரவுக்கு எதிராக மரண தண்டனை என்ற தீர்ப்பை சுதந்திர மாணவர் அமைப்பு (Independent Student Union) அறிவித்தது.

அவரது மரண ஊர்வலத்தில் 'விஜயவைக் கொன்ற விஜயவீரரைக் கொன்றே தீருவோம்!' என்று கோஷங்கள் கிளப்பினார்கள். அவர்களுக்கு பின்னால் அவரை சினிமா நாயகனாகப் போஷித்தவர்கள் அவரது மரணத்தைத் தாங்க முடியாது அநேகர் குடிபோதையில் இருந்து மாணவர்களின் கோஷங் களை ஒப்பாரி வைத்தனர். அது ஓரளவில் அசிங்கமாக இருந்தாலும், நிலைமையை வெளிப்படுத்தியது. 'சமாதானத்தை நேசித்த மனிதர்', 'அவரது மரணம் மக்களின் மனதை தொட்டது' என்று சர்வதேச ஊடகங்கள் கூட குறிப்புகள் பதிந்தன.

அந்த நேரங்களில் ஜே.வி.பிக்கு எதிராகப் பேசுவது தற்கொலைக்குச் சமன் என்பதை மக்கள் அறிந்திருந் தார்கள். ஆனால் சுதந்திர மாணவர் அமைப்பை நடத்தி, அதற்கு பொறுப்பாக இருந்த மாணவர்கள் இருவரில் ஒருவர் கே.என்.தர்மசிறி. மற்றவர் பந்துல சேனரத்தின. தர்மசிறியின் பணிப்பில் பந்துல அநுராதபுரம் மாவட்டத்தில் ஜே.வி.பியின் அட்டூழி யங்களை போஸ்டர் மூலமாக அறிவித்து, அதேசமயம் கராத்தே பயிற்சியும் தந்தவர்.

விஜய குமாரதுங்கவின் கொலைக்குப் பின் பந்துலவும் கொழும்புக்குப் பயணமாகி ஜே.வி.பிக்கு





விசேட அதிரடிப்படை



எதிரான பலவித போஸ்டர்களை கொழும்பில் ஒட்டும் பணியில் ஈடுபட்டு ஜே.வி.பியினரின் பார்வைக் கும் இருவருமே அகப்பட்டனர். அந்த நாள்களில் ஜே.வி.பிக்கு ஒரு முடிவு வருமென நினைத்துக் கூடப் பார்க்க முடியாத காலங்கள். ஆனால் சுதந்திர மாணவர்களுக்காக இவர்கள் 'அந்த அழிவு வந்தே தீரும்', 'விஜயவீர மரணத்தை சந்தித்தே தீருவார்!' எனப் போஸ்டர்களில் எழுதியவற்றை மக்கள் தங் கள் மனங்களில் மனதார நேசித்தார்கள். தர்மசிறியும் பந்துலவும் மிக விரைவில் கொல்லப்பட்டார்கள்.

'விஜயவீரவின் கடைசி வால் அழிக்கப்பட்டால் ஒழிய மக்களுக்கு விடிவு வரப்போவதில்லை!', 'விஜயவீரவின் வேதன நிறைந்த சாவே மக்களுக்கு சுதந்திரம் தரும்!, 'தாய் நாட்டை ஜே.வி.பி. கொலைக் கும்பலில் இருந்து காப்பாற்றவும்!' என்ற வாசகங்கள் கொண்ட போஸ்டர்கள் பெருமளவில் ஒட்டப்பட்டன. அவற்றைப் படையினர் தடுத்ததாகத் தெரியவில்லை. சுதந்திர மாணவர் அமைப்பிலும் பலர் சேர்ந்து இயங்கத் தொடங்கினர். கொள்கை அடிப்படையற்ற, சந்தர்ப்பவாதம், தங்கள் வேதனையில் எதையும் பெற்றுக்கொள்ளாது, அடுத்தவர் மூலம் அதிகாரங்களை பெறும் உத்தியைப் பயங்கரவாதத்தால் பெற்றுக் கொள்ள முயல்கிறார்கள் என்பது ரவி ஜெயவர்த் தனவினது மட்டுமல்ல, பலரதும் கருத்தாக இருந்தது. தங்களுக்காகப் பதிலாள்களை வைத்து நாட்டின் போரை நடத்தச் செய்து, அந்தப் போரால் இந்திய படையினர் வெளியேற்றப்பட வேண்டும் எனக் கோஷம் போடுவது அநேகருக்கு வேஷமாகப்பட்டது. கட்டுப்பாடற்ற கொலைகளுக்கும் சந்தர்ப்பவாதங்களுக் கும் வேறு சிலவற்றாலும் அவர்கள் உந்தப்பட்டனர் என்ற கருத்துக்களும் பலருக்கும் உண்டு.

(தொடரும்)

# 19 நாள்கள் மோதலுக்குப் பின் காஷ்மீர் எல்லையில் அமைதி

19 நாள்கள் பதற்றத்துக்குப் பின் எல்லையில் மோதல்கள் அற்ற இரவு நீடித்ததாகவும், அமைதி திரும்பியுள்ளதாகவும் இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இராணுவம், "இந்தியாவும், பாகிஸ்தானும் சனிக்கிழமை மாலை மோதல் நிறுத்தத்துக்கு உடன்பட்டதைத் தொடர்ந்து எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை ஒட்டிய ஜம்மு காஷ்மீர் பகுதிகள் மற்றும் பிற சர்வதேச எல்லைகளை அண் மித்த பகுதிகளில் மே 11 - 12 இடைப் பட்ட இரவில் அமைதி நிலவியது. குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு என எதுவும் நிகழவில்லை." என்று தெரிவித்துள்ளது.

முன்னதாக ஏப்ரல் 22 ஆம் திகதி பஹல்காமில் தாக்குதல் நடந்தது. அதன் பின்னர் ஏப்ரல் 23 தொடங்கி மே 6 வரை எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டருகே போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் தாக்குதல் நடத்திவந்தது. இதனையடுத்து இந்தியா மே 7 இல் நள்ளிரவில் ஒபரேஷன் சிந்தூர் தாக்குதலை நடத்தியதிலிருந்து இரு நாடுகளுக்கும்



இடையே வான்வழி மோதல் தொடங்கியது. இந்நிலையில், "19 நாள்களுக்குப் பின்னர் நேற்றிரவு எல்லையில் அமைதி நிலவியது." என்று இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

இருதரப்பும் மோதல்களை நிறுத்தியுள்ள நிலையில் ஜம்மு காஷ்மீர் எல்லை கிராமமான பூஞ்சில் இயல்பு நிலை திரும்பி வருகிறது. பூஞ்ச் கிராமத்தில் சுரான்கோட் பகுதி எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. இரண்டு நாள்களுக்கு முன்னர் சுரான் கோட்டில் கடுமையான தாக்குதல் நடந்தது. இதனையடுத்து அப்பகுதிவாசிகள் ஊரைவிட்டு வெளியேறினர். பக்கத்து கிராமங்களில் இருந்த பதுங்குகுழிகளில் தஞ்சம் புகுந்தனர். சிலர் ஜம்முவுக்கே சென்றனர். இப்போது எல்லையில் பதற்றம் தணிந்துள்ளதால் அவர்கள் மீண்டும் கிராமத்துக்கு திரும்ப ஆயத்தமாகி வருகின்றனர்.

நேற்று காலை நிலவரப்படி ஸ்ரீநகர், பதன்கோட், ரஜோரி, அக்னூர், ஜம்மு, குல்காம், ஸ்ரீ கங்காநகர், புட்காம் பகுதிகளில் இயல்புநிலை திரும்பிவருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பில் சண்டிகர் துணை ஆணையர் கூறுகையில்,

"எல்லை கிராமங்கள் மட்டுமின்றி நகரின் பிற பகுதிகளிலும் இயல்பு நிலை திரும்பியுள்ளது. மக்கள் அன்றாட வேலைகளைத் தொடங்கியுள்ளனர். எல்லாம் சீராகச் செல்கிறது. கடைகள், வர்த்தக நிறுவனங்கள் முன்புபோல் இயல்பாக செயல்படுகின்றன. மக்கள் வீணான வதந்திகளைப் பரப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்." என்றார்.

# பா.ஜ.க, பா.ம.கவுடன் ஒருபோதும் கூட்டணி அமைக்க மாட்டோம்

## திருமாவளவன் திட்டவட்டம்

பா.ஜ.க, பா.ம.கவுடன் ஒருபோதும் கூட்டணி அமைக்க மாட்டோம் எனவும் இந்த நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியா-பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்த அறிவிப்பை இந்திய அரசு அல்லது பாகிஸ்தான் வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால், இந்த அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி வெளியிட்டுள்ளமை புரியாத புதிராக இருக்கிறது. அதேநேரம், போர் நிறுத்தத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். ஆனால், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பது அவசியம்.

ஒட்டுமொத்தமாக பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும். பயங்கரவாதத்துக்கு எதிராக ஜனநாயகக் கட்சிகள் அனைவரும் குரல் எழுப்ப வேண்டும். இந்தியா- பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும். சுமுகமான உறவைப் பேண வேண்டும். போர் வேண்டும் என்று விரும்புகிற சக்திகள், ஜனநாயகத்தின் அடிப்படையில் போர் வேண்டாம் என்று சொல்பவர்கள் மீது அவதூறு பரப்பி வருகின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக அண்



ணாமலை கூறியது கற்பனைவாதம். அவர் கூறுவதுபோல, ஒரு நாட்டை எளிதாக அழித்து, ஒழித்துவிட முடியாது. நாடு இல்லாமலேயே பயங்கரவாதம் இருக்கிறது. அமைதி தேவை என்பதுதான் மக்களின் விருப்பம். டாஸ்மாக் கடைகள் நிரந்தரமாக மூடப்பட வேண்டும். பா.ஜ.க, பா.ம.கவுடன் ஒருபோதும் கூட்டணி இல்லை என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்." - என்றார்.

# உ.பி.யில் 17 பெண் குழந்தைகளுக்கு 'சிந்தூர்' எனப் பெயரிட்ட பெற்றோர்

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான மோதல் தணிந்துள்ள நிலையில், இந்தியா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையான ஒபரேஷன் சிந்தூரால் ஈர்க்கப்பட்டு, உத்தரப் பிரதேசத்தில் பிறந்த 17 பெண் குழந்தைகளுக்கு அவர்களது குடும்பத்தினர் `சிந்தூர்' எனப் பெயரிட்டுள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தில் மே 10, 11 ஆகிய திகதிகளில் குஷிநகர் மருத்துவக் கல்லூரியில் பிறந்த 17 பெண் குழந்தைகளுக்கு `சிந்தூர்' என குடும்பத்தினர் பெயரிட்டுள்ளனர் என்று மருத்துவக் கல்லூரியின் முதல்வர் வைத்தியர் ஆர்.கே.ஷாஹி தெரிவித்துள்ளார்.




பாகிஸ்தானுக்கு உரிய பதிலடி கொடுத்தற்காக இந்திய ஆயுதப் படைகளைப் பாராட்டிய குஷிநகரைச் சேர்ந்த அர்ச்சனா ஷாஹி என்பவர் தனது மகளுக்கு இராணுவ நடவடிக்கையின் பெயரான 'சிந்தூர்' என வைத்துள்ளதாக கூறினார்.

மேலும், "பஹல்காம் தாக்குதலில் பலர் தங்கள் கணவரை இழந்துள்ளனர். அவர்களுக்கு இந்திய இராணுவத்தினர் தக்க பதிலடி கொடுத்துள்ளனர். சிந்தூர் என்பது வெறும் வார்த்தையல்ல. அது ஓர் உணர்ச்சி. எனவே எங்கள் மகளுக்கு சிந்தூர் என்று பெயரிட முடிவு செய்துள்ளோம்" என்றார். அவரது கணவர் அஜித் ஷாஹியும் இதே கருத்தையே தெரிவித்தார். "எங்கள் மகள் பிறப்பதற்கு முன்பே அர்ச்சனாவும் நானும் அந்தப் பெயரைப் பற்றி யோசித்தோம். இந்த வார்த்தை எங்களுக்கு ஓர் உத்வேகம் அளிக்கிறது. இதை கவுரமாக கருதுகிறோம்" என்று அவர் கூறினார்.

# அமெரிக்காவும் சீனாவும் வரிகளை பரஸ்பரம் 10 வீதம் குறைக்க ஒப்புதல்

அமெரிக்காவும் சீனாவும் பரஸ்பரம் விதித்துள்ள இறக்குமதி வரிகளை 10 வீதம் 90 நாள்களுக்குக் குறைக்க ஒப்புக்கொள்ளப்பட்டதாக அமெரிக்க நிதி அமைச்சர் ஸ்காட் பெசென்ட் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் சீன அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க நிதி அமைச்சர் ஸ்காட் பெசென்ட்,

"இரு தரப்பும் உயர்த்தப்பட்ட வரிகளை 90 நாள்களுக்கு இடைநிறுத்தம் செய்ய ஒப்புக் கொண்டுள்ளன. 100 வீதத்துக்கும் மேல் விதிக்கப்பட்ட வரி விகிதங்கள் 10 வீதமாக இருக்கும்.

இரு நாடுகளும் தங்கள் தேசிய நலனை மிகச் சிறப்பாகப் பிரதிநிதித்துவப்படுத்தின. நாங்கள் இருவரும் வர்த்தக சமநிலையை ஏற்படுத்த ஆர்வமாக உள்ளோம், அமெரிக்கா அதை நோக்கி தொடர்ந்து நகரும். இரு தரப்பும் தங்களுக்கு இடையேயான வர்த்தக வேறுபாடுகளை குறைப்பதில் அடைந்துள்ள முன்னேற்றம் பாராட்டுக்குரியது." என தெரிவித்தார்.



# மல்யுத்த ஜாம்பவான் சபு காலமானார்

தொழில்முறை மல்யுத்த ஜாம்பவான் சபு, தனது 60 ஆவது வயதில் காலமானார்.

நேற்று முன்தினம் அவர் காலமானார் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கரான சபு 1964 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி பிறந்துள்ளார்.

1985 ஆம் ஆண்டு தொழில்முறை மல்யுத்த வீரராக அறிமுகமான இவர் இந்த வருடம் தனது ஓய்வை அறிவித்தார்.

சபு, மூன்று முறை உலக "ஹெவி வெயிட்" சாம்பியன் பட்டத்தைத் தன் வசப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்க பணயக் கைதியை விடுதலை செய்கிறது ஹமாஸ்

ஹமாஸ் பிடியில் உள்ள அமெரிக்க பணய கைதியை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் குழுவினர் கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பின் மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் அமைப்பினால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 59 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், தங்கள் பிடியில் உள்ள அமெரிக்க பணய கைதியை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டுள்ளது.



இஸ்ரேல் வாழ் அமெரிக்கரான இடன் அலெக்சாண்டர் இஸ்ரேல் இராணுவத்தில் பணியாற்றி வந்த நிலையில் 2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி நடந்த பயங்கரவாத தாக்குதலில் அலெக்சாண்டரை ஹமாஸ் அமைப்பினால் காசா முனைக்கு பணய கைதியாக கடத்தி செல்லப்பட்டார்.

அவரை மீட்க பேச்சுவார்த்தை நடைபெற்றது. தற்போது அமெரிக்கா, ஹமாஸ் இடையேயான நேரடி பேச்சுவார்த்தையில் அலெக்சாண்டரை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 13.05.2025




இன்றைய நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள். உங்களிடம் வெற்றி பெறவோம் என்ற உறுதி உள்ள காரணத்தால் நீங்கள் வெற்றியை எளிதில் அடைவீர்கள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். பொதுவான விஷயங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் சக பணியாளர்களிடம் ஒத்த உணர்வுகளை அனுபவிக்க இயலும்.

நீங்களும் உங்கள் துணையும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள். ஆக்க பூர்வமான பேச்சு வார்த்தை காரணமாக உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் கையிலிருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.




உங்கள் திறமைகளை வெளிபடுத்த உகந்த நாள். முக்கிய முடிவுகள் எடுக்க சிறந்த நாள். இன்றைய நாளை சிறப்பாக பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிக்கு பலன் கிடைக்கும். நீங்கள் சிறப்புடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உறவில் காணப்படும் நல்ல புரிந்துணர்வே இதற்கு காரணம்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். இன்றைய நாளை சிறப்பாக திட்டமிட்டு முன்னேற வேண்டும்.இன்று நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




எதிர்மறை எண்ணங்களை விலக்கி நேர்மறை எண்ணங்களை மேற் கொள்ள வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் உங்கள் இலக்குகளில் வெற்றி காணலாம்.

தவறான புரிந்துணர்வு காரணமாக சக பணியாளர்களுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது உங்கள் பணியின் வளர்ச்சியை பாதிக்கும்.

தவறான புரிந்துணர்வு மற்றும் அபிப்ராயம் காரணமாக உங்கள் துணையுடன் அமைதியின்மை காணப்படும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை குடுபத்துக்குச் செலவு செய்வீர்கள்.




இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள்ள தால் புத்திசாலித்தனத்துடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளவேண்டும். பொறுமையும் உறுதியும் இன்று குறைந்து காணப்படும். இந்தப் பண்புகளை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.நீங்கள் பணியில் தவறுகள் செய்வீர்கள். இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

இன்று நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். கடுமையான செயல்கள் மற்றும் உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவில் நல்லிணக்கம் பராமரிக்க இயலாது.

அதிகரிக்கும் செலவுகள் கவலை அளிக்கும். நீங்கள் பணத்தை சிறந்த முறையில் செலவிட வேண்டும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும்.




தொலை தூர நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அதிக பயணங்கள் மேற்கொள்வீர்கள்.

சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் முயற்சிக்கு நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையின் அன்பைப் பெறுவீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. சில கடினமான சூழ்நிலைகள் காணப்பட்டாலும் நீங்கள் உற்சாகமான மன நிலையில் இருப்பீர்கள்.




இன்று நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி நற்பலன் காணுங்கள்.

நீங்கள் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் புரிந்துணர்வு சக்தி மூலம் நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பீர்கள். உங்கள் சமயோஜித புத்தியும் நேர்மறை எண்ணங்களும் இந்தச் சூழ் நிலையை உருவாக்கித் தரும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். நீங்கள் இன்று உங்கள் குடும்ப நலனுக்காக செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் தினசரி செயல்களை மேற்கொள்வதில் சற்று எச்சரிக்கை தேவை. உங்கள் வெற்றிப் பாதையின் குறுக்கே பதற்றமும் ஏமாற்றமும் காணப்படும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக இன்று உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு செலவு செய்வீர்கள். அது வீண் செலவாக இருக்கும். திட்டமிட்டு கட்டுப்பாட்டுடன் செலவு செய்வது உதவிகரமாக இருக்கும்.




இன்று அதிக கவலையுடன் காணப்படுவீர்கள். உற்சாகமாக இருக்க முயலுங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை முடிப்பதற்கு கூடுதல் கவனம் தேவை. அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

இன்று நீங்கள் சகஜமான உறுதியான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்லுறவை அனுபவிக்க இயலும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியமாக இருக்க யோகா அல்லது உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள். இன்று இருமல் பிரச்சினையால் அவதிப்பட நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.05.2025




சுய முயற்சி மூலம் நீங்கள் உங்கள் இலக்குகளை அடையலாம். எந்த செயலையும் நம்பிக்கையுடன் செய் யுங்கள்.

பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். கடின உழைப்புக்கான பாராட்டு கிடைக்கும்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். இது மேலும் வளரும். உங்கள் துணை சம்பந்தமான இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது. நீங்கள் துடிப்புடனும் உற்சாகமாகவும் இருப்பீர்கள்.




இன்றைய முக்கியமான விஷயங்களை வேறு நாளைக்கு தள்ளிப் போடுங்கள். சுய முயற்சியில் நீங்கள் மனப் போராட்டங்களை சந்திப்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே உங்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரலாம்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு காணப்படாது. குடும்பப் பிரச்சினை காரணமாக தேவையற்ற மோதல்கள் ஏற்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இன்று நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

நீங்கள் தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்படலாம். வறுத்த கார உணவு வகைகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

பணிகள் அதிகமாக காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் அமைதியின்மை யை உணர்வீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் கையில் அதிக பணம் காணப்படாது. மேலும் மருத்துவ செலவுகளை நீங்கள் மேற்கொள்ள நேரும்.

இன்று தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கார உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். எனவே கவனமாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று பணிகளைக் கையாள்வது அவ்வளவு எளிதாக இருக்காது. இன்று சுமூகமான நாளாக இருக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் பணிகளை கவனமுடனும் நம்பிக்கையுடனும் மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க இயலாது. இன்று உங்கள் நண்பர்களின் தவறான ஆலோசனை கேட்டு நடப்பீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை

# அதிகார மோகத்திலேயே அரசாங்கம் செயற்படுகிறது

## பிரேம்நாத் சி தொலவத்த குற்றச்சாட்டு

"அரசாங்கம் தற்போது அதிகார மோகத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக கள்வர்கள் என விமர்சித்த உறுப்பினர்களை விலைக்கு வாங்க முற்படுகிறது. இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இப்போதாவது புரிந்து கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது."

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தேசிய மக்கள் சக்தியைத் தவிர ஏனைய அனைவரும் கள்வர்கள், ஊழல்வாதிகள் என்பதே அரசாங்கத்தின் தீவிர பிரசாரமாக இருந்தது. ஆனால் இன்று தாம் கூறியவற்றை



மறந்து, ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் நிலைமைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சபைகளிலும் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தீர்மானம் எடுப்பதற்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

அரசாங்கம் தற்போது அதிகார மோகத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக கள்வர்கள் என விமர்சித்த உறுப்பினர்களை விலைக்கு வாங்க முற்படுகிறது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற அரசாங்கத்தின் மமதையை மக்கள் இல்லாமலாக்கியமைக்கு நன்றி கூற வேண்டும். அரசாங்கம் வெறும் பேச்சு மாத்திரமே என்பதை மக்கள் உணர்ந்துள்ளதால் தான் 23 இலட்சம் வாக்குகளை குறைத்துள்ளனர்.

6 மாதங்கள் என்ற குறுகிய காலத்துக்குள் மக்கள் அரசாங்கத்துக்கு சிறந்த பாதம் புகட்டியுள்ளனர். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

இப்போதாவது அவர் அதனை ஏற்றுக் கொண்டுள்ளமை பெரிய விடயமாகும். மக்கள் அரசாங்கத்தை புறக்கணித்துள்ளதால் எதிர்க்கட்சிகள் இணைந்து ஆட்சியமைப்பதில் சிக்கல் இல்லை."– என்றார்.